X 2013

**Series RSH**

**Code No. 10**

Roll No. | | | | | | | |

Candidates must write the Code on the title page of the answer-book.

- Please check that this question paper contains **19** printed pages.
- Code number given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- Please check that this question paper contains **17** questions.
- **Please write down the Serial Number of the question before attempting it.**
- 15 minutes time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the students will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

# SUMMATIVE ASSESSMENT – II

# தமிழ்

# TAMIL

*நேரம் : 3 மணி*
*Time : 3 hours*

*மதிப்பெண்கள் : 90*
*Maximum Marks : 90*

**இக் கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது :**
**The question paper is divided into four Sections :**

| | | |
|---|---|---|
| பிரிவு அ<br>**SECTION A** | படித்தல் (உரைநடைப்பகுதி)<br>Reading Comprehension | *15 மதிப்பெண்கள்*<br>*15 Marks* |
| பிரிவு ஆ<br>**SECTION B** | எழுதுதல்<br>Writing | *20 மதிப்பெண்கள்*<br>*20 Marks* |
| பிரிவு இ<br>**SECTION C** | இலக்கணம்<br>Grammar | *15 மதிப்பெண்கள்*<br>*15 Marks* |
| பிரிவு ஈ<br>**SECTION D** | இலக்கியம் / தமிழ்ப் பாடநூல்கள்<br>Literature / Text Books | *40 மதிப்பெண்கள்*<br>*40 Marks* |

## பகுதி அ

**1.** பின்வரும் பகுதியைப் படித்துத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு ஏற்ற விடைகளை எழுதுக : *5*

இந்த உலகம் ஒரு பயிற்சிக் கூடம். நம்மை வலிமைப் படுத்திக்கொள்ளவே நாம் இங்கு பிறந்திருக்கிறோம். துணிச்சலும் வீரமும் மிக்கவர்களே இப்போது நமக்குத் தேவை. இரத்தத்தில் வேகம், நாம்பில்வலிமை, இரும்பை ஒத்ததசைகள் எஃகை ஒத்தநரம்புகள் கொண்ட இளைஞர்களே ! நீங்கள் வலிமையாக இருங்கள். சொந்தக் கால்களில் நிற்கக் கற்றுக்கொள்ளுங்கள். வலிமை வெளிப்படாத வாழ்க்கை வீணானதாகும். உலகத்தின்மீது ஆட்சியும், செல்வத்தின் மீது ஆட்சியும் வீரத்தினால் மட்டுமே விளையும். துணிச்சலாகத் தம் கருத்துக்களைச் சொல்லவும், இருக்கவும் வேண்டும். இத்தகைய இயல்புகளைப் பெற்றிருந்ததாலேயே நாம் சுவாமி விவேகானந்தரை வீரத்துறவி என்கிறோம். பாரதியை வீரக்கவி என்கிறோம். மனத்தை உற்சாகமாக வைத்துக் கொள்ளவும் பிறர்வாழ உதவி செய்திடவும் இந்த மகான்கள் காட்டிய வழியில் நடக்கவும் நாம் உறுதிமேற் கொள்ளவேண்டும்.

**வினாக்கள் :**

(i) நாம் எந்த மகான்கள் காட்டிய வழியில் நடக்கவேண்டும் ?

(அ) காந்திஜி நேருஜி

(ஆ) சுவாமி விவேகானந்தர், பாரதியார்

(இ) திலகர், கோகலே

(ஈ) திருப்பூர் குமரன், சிதம்பரனார்

(ii) இப்போது நமக்குத் தேவையானவர்கள் யார் ?

(அ) செல்வம் மிக்க மனிதர்கள்

(ஆ) அஞ்சிநடுங்கும் பயந்தாங்கொள்ளிகள்

(இ) துணிச்சலும் வீரமும் மிக்கவர்கள்

(ஈ) தன்னலவாதிகள்

(iii) நரம்புகள் எவ்வாறு இருக்கவேண்டும் ?

(அ) தளர்வடைந்தவைகளாய்

(ஆ) இரும்பை ஒத்தவைகளாய்

(இ) எஃகை ஒத்தவைகளாய்

(ஈ) தங்கம் போன்றவைகளாய்

(iv) இந்த உலகம் ஒரு

(அ) பயிற்சிக்கூடம்

(ஆ) காடுகள் மிக்கது

(இ) நிலையற்றது

(ஈ) பல்வேறுபட்ட நிலங்களைக் கொண்டது

(v) வீரத்துறவி யார் ?

(அ) பாரதியார்

(ஆ) வள்ளலார்

(இ) சுவாமி விவேகானந்தர்

(ஈ) சிதம்பரனார்

**2.** பின் வரும் பத்தியைப்படித்து அதன் கீழ் கொடுக்கப்பட்ட பல்விடை வினாக்களுக்கு விடை எழுதுக : 5

மனிதன் காட்டு மிராண்டியாக வாழ்ந்த காலத்திலிருந்து அவனது வாழ்க்கை ஆரம்பமாகிறது. அப்போது அவன் கிடைத்ததைத் தின்று வயிறு வளர்த்தான். செய்கைகள் மூலம் கருத்துகளைத் தெரிவித்தான். பின்னர் உணவைப் பக்குவப்படுத்தி உண்ணவும். ஒலிக்குறிப்புகளால் கருத்தைத் தெரிவிக்கவும் தெரிந்துகொண்டான். மனிதன் பேசத்தொடங்கிய காலமே நாகரிகத்தின் தொடக்கமாகும். ஒலிக்குறிப்புக்கள் மொழி வடிவம் பெற்றகாலம் நாகரிக வளர்ச்சியாகும். மொழிக்கு எழுத்துவடிவம் உருவானதே நாகரிகத்தின் உச்சமாகும். பிறந்த குழந்தையை அப்படியே விட்டுவிட்டால் அது அரக்கன் ஆகிவிடும். அதனை மனிதனாக மாற்றுவது கல்வியாகும். கல்வியின் கருவியே எண்ணும் எழுத்தும் ஆகும். மனித குலம் இன்றைய நிலையை அடைவதற்கு எவ்வளவு காலம் ஆகியிருக்கும் என்பதை நினைக்கவே வியப்பாக இருக்கிறது.

**வினாக்கள் :**

(i) எதை நினைக்க வியப்பாக இருக்கிறது ?

(அ) மனிதனின் உணவுப்பழக்கங்களை

(ஆ) ஆடைஅணிகலன்களை

(இ) மனிதனின் இன்றைய நிலை அடைய எவ்வளவு காலம் ஆகியிருக்கும் என்பதை நினைக்க

(ஈ) மனிதனின் ஆக்கல் அழித்தல் திறனை நினைக்க

**3.** பின்வரும் பத்தியைப் படித்து, கீழே கொடுக்கப்பட்ட பல்விடை வினாக்களுக்கு விடைதருக : 5

விமானங்களை மனிதன் உருவாக்கப் பறவைகளை மனிதன் கண்ட பிறகுதான் அறிவு விரிவடைந்தது. பறவைகள் பலவிதம். ஒவ்வொன்றும் ஒருவிதம். அவற்றில் ஒன்றுதான் விசிறிவால் உள்ளான் எனும் வகையாகும். விசிறிவால் உள்ளான் ஐரோப்பா, ஆப்பிரிக்கா, தெற்குஆசியா ஆகிய நாடுகளில் காணப்படுகின்றது. இப்பறவைகள் 25 முதல் 27 செ. மீட்டர் நீளம் இருக்கும். சிறகைவிரித்தால் 44 முதல் 47 செ. மீ இருக்கும். சிறிய குட்டையான கால்களுடன் விளங்கும் இப்பறவையின் அலகுமட்டும் 5.5 முதல் 7 செ. மீட்டர் வரை நீளமிருக்கும். இதன்வால்பகுதி விசிறி மடிப்பைப் போல் இருக்கும். அதுவே இதற்குப் பெயர்க் காரணமாயிற்று. உடல் முழுவதும் பழுப்பு நிறத்தில் வைக்கோல் நிறத்தில் வரிவரியாக இருக்கும். சேறும் சகதியும் மிகுந்த இடங்களில் இது வாழும், சேற்றைக் கிளறி அதிலுள்ள பூச்சிகளை உணவாகக் கொள்ளும். இப்பறவையின் எண்ணிக்கை மிகவும் குறைந்து வருவதால் இது அரிய இனப் பறவையாக அறிவிக்கப்பட்டுள்ளது. அருகி வரும் இத்தைய பறவைகளின் இனம் அழியாது காக்கவேண்டியது நம் கடமை யன்றோ !

**வினாக்கள் :**

(i) பறவைகளில் சில அரிய இனமாக அறிவிக்கப்படுவது என் ?

(அ) அவை அழகாக இருப்பதால்

(ஆ) மிகுதியாகக் காணப் படுவதால்

(இ) எண்ணிக்கை மிகவும் குறைந்து வருவதால்

(ஈ) மனிதர்கள் வளர்ப்பதால்

(ii) மனிதனின் நாகரிகத்தின் உச்சமாவது எது ?

(அ) விலங்குகளைப்போல அலைந்தது

(ஆ) பேசத் தோடங்கிய காலம்

(இ) காட்டுமிராண்டியாக இருந்தது

(ஈ) மொழிக்கு எழுத்து வடிவம் கண்டதுவே

(iii) பிறந்த குழந்தையை மனிதனாக்குவது எது ?

(அ) குழந்தை வளரும் சூழல்

(ஆ) பெற்றோர்களின் அன்பு

(இ) கல்வி

(ஈ) நண்பர்கள்

(iv) மனித வாழ்க்கை ஆரம்பமானது எப்போது ?

(அ) உலகம் தோன்றிய போது

(ஆ) காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த போது

(இ) கல்வி கற்கத் தொடங்கிய போது

(ஈ) ஒலிக்குறிப்புகளை அறிந்தபோது

(v) கல்வி என்பது எது ?

(அ) நாகரிகம்

(ஆ) உணவைப் பக்குவப்படுத்துவது

(இ) குழந்தையை மனிதனாக்குவது

(ஈ) எண்ணும் எழுத்தும்

(ii) விசிறி வால் உள்ளான் கால்கள் எப்படிப்பட்டவை ?

(அ) நீளமானவை

(ஆ) பருமனானவை

(இ) ஒல்லியானவை

(ஈ) சிறிய குட்டையானவை

(iii) விசிறிவால் உள்ளானின் உடல் முழுதும் எவ்வாறு இருக்கும் ?

(அ) பச்சை நிறப்புள்ளிகளுடன் இருக்கும்

(ஆ) சிவப்பு நிறக் கோடுகளுடன் இருக்கும்

(இ) பழுப்புநிறத்தில் வைக்கோல் நிறத்தில் வரிவரியாக இருக்கும்

(ஈ) வெண்மை நிறத்தில் காட்சிதரும்

(iv) விசிறிவால் உள்ளான் எங்கு வாழும் ?

(அ) சேறும் சகதியுமாக இருக்கும் இடத்தில்

(ஆ) மரப் பொந்துகளில்

(இ) செடிகளுக்கிடையில்

(ஈ) வளைகளில்

(v) விசிறிவால் உள்ளானின் வாழ்விடம் எந்நாடுகளில் உள்ளது ?

(அ) ஆஸ்திரேலியாக் கண்டத்தில்

(ஆ) அமெரிக்க கண்டத்தில்

(இ) ஐரோப்பா, ஆப்ரிக்கா, தெற்காசிய நாடுகளில்

(ஈ) கனடாவில்

## பகுதி ஆ

**4.** உனது வீட்டில் நடந்த திருட்டு பற்றிக் காவல் துறை ஆணையர்க்குக்கடிதம் எழுதுக. அல்லது ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்பதை விளக்கி மதுரையில் வாழும் உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.
இரண்டு கடிங்களுக்கும் உனது முகவரி யாழினி/எழிலன், பாரதிசாலை எண் 15. திருவல்லிக்கேணி, சென்னை-5 600005 எனக்கொள்க. 8

**5.** பின்வரும் பகுதிகளில் ஏதேனும் ஒரு பகுதியில் உள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக. 8

(அ) மாசும், தூசும் உடல்நலம் கெடுப்பவை — மாசும் தூசும் ஏற்படக் காரணங்கள் — கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் — தனிமனிதன், சமுதாயம் ஆகியவர் கடமை — நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

(ஆ) கல்வியும் கல்விக்கூடங்களும் — வள்ளல்கள் உருவாக்கி வளர்த்த அக்காலக்கல்வி — வணிகப் பொருளாகி விட்ட இக்காலக்கல்வி — வருங்காலமக்களின் கல்விக்கான செலவும் கல்வியின் தரமும் — அரசின் கடமையும் மக்களின்விழிப்புணர்வும்.

(இ) நூலறிவு — நூலகங்களும் அவற்றின் வகைகளும் — பராமரிப்பும் பயனுள்ள படிப்பில் ஆர்வமும் — நூலகங்களில் படித்துயர்ந்த சான்றோர்கள் — அவர்கள் போல யாவரும் சிறக்க முயலுதல்.

6. நீ வாழும் பகுதியில் நடந்த பசுமைமயமாக்கல் மரம் நடுதல் பற்றிய விழிப்புணர்வு முகாம். *4*

**அல்லது**

நீ வாழும் பகுதியில் நடந்த மாற்றுத்திறனாளிகளின் நலம் பேண நடந்த உதவிமுகாம் பற்றி அறிக்கை எழுதுக.

## பகுதி இ

7. சான்று தருக (எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும்) *3*

(i) திரிதல் விகாரப் புணர்ச்சி

(அ) பலா + மரம்

(ஆ) புலி + பாய்ச்சல்

(இ) சொல் + பொருள்

(ஈ) மணி + ஒலி

(ii) வஞ்சப்புகழ்ச்சி யணி

(அ) உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்

(ஆ) எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்

(இ) பாரி பாரி என்று பல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப்புலவர்
பாரி ஒருவனு மல்லன்
மாரியு முண்டீண்டு லகு புரப் பதுவே

(ஈ) இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில்

(iii) மையீற்றுப்புணர்ச்சி

(அ) பால் + கடல்

(ஆ) பசுமை + புல்

(இ) மண் + ஆசை

(ஈ) தமிழ் + மொழி

(iv) மருதநில விலங்குகள்

(அ) முயல், மான்

(ஆ) எருமை, நீர்நாய்

(இ) புலி, கரடி

(ஈ) முதலை, சுறா

(v) குற்றியலுகர ப்புணர்ச்சி

(அ) நாடென்ப

(ஆ) பதிவெண்

(இ) வேர்க்கடலை

(ஈ) பூங்குயில்

**8.** நிரப்புக (எவையேனும் **மூன்றுமட்டும்**) *3*

(i) முதற்பொருள் ___________ வகைப்படும்.

(அ) ஐந்து

(ஆ) ஆறு

(இ) இரண்டு

(ஈ) நான்கு

(ii) நெய்தல் நிலம் என்பது ___________ .

(அ) மலையும் மலைசார்ந்த நிலமும்

(ஆ) கடலும் கடல்சார்ந்த நிலமும்

(இ) வயலும் வயல் சார்ந்த நிலமும்

(ஈ) காடும் காடுசார்ந்த நிலமும்

(iii) மாற்ற மின்றி நிலைமொழியும் வருமொழியும் புணர்வது ____ .

(அ) திசைப்புணர்ச்சி

(ஆ) விகாரப்புணர்ச்சி

(இ) சுட்டுப்புணர்ச்சி

(ஈ) இயல்புப்புணர்ச்சி

(iv) ஆசிரியப்பாவுக்குரிய ஓசை ________ எனப்படும்.

(அ) செப்பலோசை

(ஆ) துள்ளலோசை

(இ) தூங்கலோசை

(ஈ) அகவலோசை

(v) முல்லைநிலக்கடவுள் ______ .

(அ) திருமால்

(ஆ) வருணன்

(இ) இந்திரன்

(ஈ) முருகன்

**9.** கூறியவாறு செய்க. (எவையேனும் **மூன்றுமட்டும்**) *3*

(i) மாசிலா (பிரித்தெழுதுக)

(அ) மாசி + லா

(ஆ) மாசு + இலா

(இ) மா + சிலா

(ஈ) மாசில் + ஆ

(ii) தண்ணீர் (நிலைமொழியை மட்டும் எழுதுக)

(அ) தண்

(ஆ) த

(இ) தண்மை

(ஈ) தண்ணி

(iii) மேனாடு (பிரித்தெழுதுக)

(அ) மேல் + நாடு

(ஆ) மே + நாடு

(இ) மேற்கு + நாடு

(ஈ) மேலை + நாடு

(iv) கற்றபின் (அசைபிரித்து வாய்பாடுகூறுக)

(அ) நிரை + நேர் + நேர் - புளிமாங்காய்

(ஆ) நேர் + நேர் + நேர் - தேமாங்காய்

(இ) நேர் + நிரை + நேர் - கூ விளங்காய்

(ஈ) நேர் + நிரை - கூவிளம்

(v) நிறப்பண்புப் புணர்ச்சியை அளவுப் பண்புப்புணர்சியாக்குக நீலக்கடல்

(அ) அலைகடல்

(ஆ) நீள்கடல்

(இ) ஒலிகடல்

(ஈ) செங்கடல்

**10.** இலக்கணக்குறிப்புத் தருக. (**மூன்றுமட்டும்**) *3*

(i) கற்சிலை

(அ) இயல்புப்புணர்ச்சி

(ஆ) குற்றியலுகரப் புணர்ச்சி

(இ) திரிதல் விகாரப்புணர்ச்சி

(ஈ) தோன்றல் விகாரப்புணர்ச்சி

(ii) பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்

(அ) சொற்பின் வருநிலையணி

(ஆ) சிலேடை அணி

(இ) வஞ்சப்புகழ்ச்சியணி

(ஈ) பொருட்பின் வருநிலையணி

(iii) எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

(அ) நேரிசை வெண்பா

(ஆ) இருவிகற்பக்குறள் வெண்பா

(இ) ஒருவிகற்பக்குறள் வெண்பா

(ஈ) ஆசிரியப்பா

(iv) போருழந்தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
வாரல் என்பனபோல் மறித்துக் கைகாட்ட

(அ) தற்குறிப்பேற்ற அணி

(ஆ) வஞ்சப்புகழ்ச்சியணி

(இ) பிரிமொழிச்சிலேடையணி

(ஈ) பின்வருநிலையணி

(v) எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.
ஈற்றுச்சீர் பெறும் வாய்பாடு

(அ) காசு

(ஆ) பிறப்பு

(இ) நாள்

(ஈ) மலர்

**11.** சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க **(மூன்றுமட்டும்)** *3*

(i) (அ) செய்யுளின் சொல்லழகு பொருளழகு பற்றிக்கூறுவது யாப்பிலக்கணம்.

(ஆ) செய்யுளின் சொல்லழகு பொருழகுபற்றிக் கூறுவது அணியிலக்கணம்.

(இ) செய்யுளின் சொல்லழகு பொருளழகு பற்றிக்கூறுவது சொல்லிலக்கணம்.

(ஈ) செய்யுளின் சொல்லழகு பொருளழகு பற்றிக் கூறுவது எழுத்திலக்கணம்.

(ii) (அ) காய்முன் நேர் வருவது கலித்தளை.

(ஆ) காய்முன்நேர் வருவது இயற்சீர்வெண்டளை.

(இ) காய் முன் நேர் வருவது வெண்சீர் வெண்டளை.

(ஈ) காய்முன்நேர் வருவது நேரொன்றாசிரியத்தளை.

(iii) (அ) ஆசிரியப்பா ஆறுவகைப்படும்.

(ஆ) ஆசிரியப்பா நான்குவகைப்படும்.

(இ) ஆசிரியப்பா மூவகைப்படும்.

(ஈ) ஆசிரியப்பா இருவகைப்படும்.

(iv) (அ) சிறுபொழுதுகள் மொத்தம் நான்குவகைப்படும்.

(ஆ) சிறுபொழுதுகள் மொத்தம் ஐவகைப்படும்.

(இ) சிறுபொழுதுகள் மொத்தம் பதினான்கு வகைப்படும்.

(ஈ) சிறுபொழுதுகள் ஆறு வகைப்படும்.

(v) (அ) அடிகளை எவ்வாறு மாற்றினாலும் ஓசையும் பொருளும் மாறாதது நிலைமண்டில ஆசிரியப்பா.

(ஆ) அடிகளை எவ்வாறு மாற்றினாலும் ஓசையும் பொருளும் மாறாதது அடிமறிமண்டில ஆசிரியப்பா.

(இ) அடிகளை எவ்வாறு மாற்றினாலும் ஓசையும் பொருளும் மாறாதது இணைக்குறளாசிரியப்பா.

(ஈ) அடிகளை எவ்வாறு மாற்றினாலும் ஓசையும் பொருளும் மாறாதது நேரிசையாசிரியப்பா.

## பகுதி ஈ

**12.** பின்வரும் பகுதியைப் படித்துத் தொடர்ந்துவரும் பல்விடை வினாக்களுக்கு விடைதருக : *5*

முதல் மாந்தன் தோன்றிய இலைமூரியாவை மனித நாகரிகத் தொட்டில் என்பர். தமிழகம் குமரிமுனைக்குத் தெற்கே இன்னும் விரிந்து, குமரிமலை, பஃறுளியாறு முதலியவற்றை உள்ளடக்கி இருந்தது. தமிழினம் தனக்குவமையில்லா ஒருதனி இனம். தமிழர் நாகரிகம் உணவு, உடை, விருந்து ஈகை, பொறை, நடுவுநிலைமை ஆகிய பண்புகளில் சிறந்திருந்தனர். வினையை ஆடவர் உயிராகக் கருதினர். சான்றோனாதலே கல்வியின் முடிவெனப் போற்றினர். விருந்தெதிர் கொண்டு வாழ்ந்தனர். புகழெனில் உயிரும் கொடுக்கவும் பழியெனில் உலகைப் பெறவும் மறுத்தனர். ஈந்து உவந்து இன்பங் கண்டனர். நாகரிகமும் பண்பாடும் மிக்கவராகப் பழந்தமிழர் வாழ்ந்தனர். உழவையும் தொழிலையும் மதித்தனர்.

(i) பழந்தமிழர் எதன் மூலம் இன்பங் கண்டனர் ?

(அ) போர்செய்து வெற்றி பெறுவதன் மூலம்

(ஆ) சிறந்த உடை அணிவதன் மூலம்

(இ) ஈந்து உவந்து இன்பங்கண்டனர்

(ஈ) சான்றோனாவதில் இன்பங்கொண்டனர்

(ii) இலைமூரியாவை எவ்வாறு வழங்குவர்

(அ) ஒரு கண்டம் என அழைப்பர்

(ஆ) மனிதநாகரிகத் தொட்டில் என்பர்

(இ) பசுங்காடுகள் மிக்கதென வழங்குவர்

(ஈ) விலங்குகள் பல வாழுமிடம் என்பர்

(iii) குமரிமுனைக்குத் தெற்கே ஓடிய ஆறு எது ?

(அ) கங்கையாறு

(ஆ) காவிரியாறு

(இ) பஃறுளியாறு

(ஈ) பாலாறு

(iv) தமிழரிடம் இருந்த கவ்வி பற்றிய முடிவுயாது ?

(அ) சான்றோனாதல்

(ஆ) விருந்தெதிர்கோடல்

(இ) போர்க்களம் காணல்

(ஈ) உடல்வலியில் சிறந்து விளங்குதல்

(v) பழந் தமிழர் எவற்றை மதித்திருந்தனர் ?

(அ) கல்வியும் செல்வமும்

(ஆ) அருளும் பொருளும்

(இ) உழவையும் தொழிலையும்

(ஈ) உறவையும் உணர்வையும்

**13.** கீழே கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து, தொடர்ந்துவரும் பல்விடை வினாக்களுக்கு விடைதருக : *5*

அறிவு அற்றம் காக்கும் கருவி என்றார் திருவள்ளுவர். அறிவின் நுண்ணறிவு வளர்ச்சியே அறிவியல். அறிவியல் நம்வாழ்வை வளப்படுத்துகிறது. மொழியைப் பண்படுத்துகிறது. தமிழரின் அறிவுச் சுரங்கங்களாகத் திகழ்வன இலக்கியங்களே. பேரண்டம் குறித்தும் தோற்றம் குறித்தும் மேலைநாட்டவர் பல்வேறு ஆய்வுகள் நடத்தியுள்ளனர். உலகம் உருண்டை என்பதைப் பதினோராம் நூற்றாண்டிற்குப் பிறகே உறுதிசெய்த மேலைநாட்டவர் இவ்வுலகம் பேரண்டத்தின் ஒரு கோள் எனக்கூறியுள்ளனர். ஆன்மஇயல் பேசும் திருவாசகம் விண்ணியலைப் பற்றிப் பேசுகிறது.

(i) நம் வாழ்வை வளப்படுத்துவது எது ?

(அ) புவியியல்

(ஆ) ஆன்ம இயல்

(இ) தாவரவியல்

(ஈ) அறிவியல்

(ii) தமிழரின் அறிவுச்சுரங்கங்கள் எவை ?

(அ) இலக்கியங்கள்

(ஆ) கனிமவளங்கள்

(இ) வானியல்அறிவு

(ஈ) புவியியல் ஆய்வு

(iii) உலகம் எத்தகையது ?

(அ) சதுரமானது

(ஆ) செவ்வகமானது

(இ) உருண்டையானது

(ஈ) முக்கோணவடிவுடையது

(iv) ஆன்ம இயலையும் விண்ணியலையும் பேசும்நூல் எது ?

(அ) திருக்குறள்

(ஆ) திருவாசகம்

(இ) திவ்விய பிரபந்தம்

(ஈ) தேவாரம்

(v) அறிவு அற்றம் காக்கும் கருவி என மொழிந்தவர் யார் ?

(அ) பாரதியார்

(ஆ) சடையப்ப வள்ளல்

(இ) திருவள்ளுர்

(ஈ) ஔவையார்

**14.** பின்வரும் செய்யுட் பகுதியைப்படித்து, கீழே கொடுக்கப்பட்ட பல்விடை வினாக்களுக்கு ஏற்ற விடைதருக. *4*

படுகொலைப்புலி மெய்யுறக் பணிந்திவர் பாதத்து
அடிவணங்கிய கார வதிசயம் அதனால்
உடையவன் திருத்தூதரே உண்மையென் றுன்னித்
தினமு டைத்த நெஞ்சாயினர் அறிவினிற் தெளிந்தோர்.

(i) இப்பால் எந்நூலில் இடம்பெற்றுள்ளது ?

(அ) தேவாரம்

(ஆ) திருவாசகம்

(இ) திவ்வியப்பிரபந்தம்

(ஈ) சீறாப்புராணம்

(ii) புலி மெய்யுறப் பணிந்திவர் பாதத்து அடிவணங்கியது இவ்வரியில் வந்துள்ள இவர் என்பது எவரைக்குறிக்கும் ?

(அ) உமறுப்புலவரை

(ஆ) முகம்மது நபிகள் நாயகத்தை

(இ) அடியவர்களை

(ஈ) மாந்தரினத்தை

(iii) "மெய்" என்பது இப்பாடலில் தரும் பொருள் யாது ?

(அ) அண்மை

(ஆ) அருள்

(இ) உடல்

(ஈ) வாய்மை

(iv) அதிசயச் செயலாக இப்பாடல் கூறுவது யாது ?

(அ) புலி முகமதுநபிகளின் அடிவணங்கியது

(ஆ) உயிர்க் கொலைசெய்யாத புலியின் செயல்

(இ) உடல் மண்ணில் பட வணங்கியது

(ஈ) அறிவினிற் தெளிந்தோரின் சிறப்பு

**15.** எவையேனும் இரண்டு உரைநடை வினாக்களுக்கு விடைதருக. *10*

(i) பண்டைத் தமிழரின் கடல்வாணிகம், உழவுத்தொழில் மேன்மைகளை விவரி.

(ii) இன்னா செய்தார்க்கும் இனியவே செய்தவர் காந்தி யடிகள் என்பதை விவரி.

(iii) இராமலிங்கரின் இளமைப் பருவ ஆற்றலையும், திகம்பரச்சாமியார் அவரைப்போற்றியதையும் விவரி.

(iv) பண்டைத்தமிழரின் மருத்துவ அறிவாற்றலின் சிறப்புக்கைள விவரி.

(v) அறிவியற்கல்வி, சிறுதொழிற்கல்வி ஆகியன குறித்து உனது பாடப் பகுதி கூறுவன யாவை ?

**16.** எவையேனும் இரண்டு செய்யுட்பகுதி வினாக்களுக்கு விடைதருக. *8*

(i) நிற்க நேரமில்லை பாடல் மூலம் சாலை இளந்திரையன் கூறும் கருத்துக்களை விவரி.

(ii) குலசேகராழ்வார் வித்துவக்கோட்டநம்மானிடம் வேண்டுவதை விவரி.

(iii) பெரியாரைத் துணைக்கோடலின் சிறப்பையும், அவரைத் துணைக்கொள்ளாத விடத்து வரும் குற்றமும் பற்றி விவரி.

(iv) வாழ்க்கையில் பின்பற்ற வேண்டியவைபற்றிக் கலித்தொகை கூறும் கருத்துக்கள் எவை ?

**17.** ஏதேனும் ஒரு துணைப்பாட வினாவிற்கு விளக்கமான விடைதருக. *8*

(i) மாணவரும் நூலகமும் பற்றி விளக்கக்கட்டுரை எழுதுக்.

(ii) அயோத்திதாசர் ஆற்றிய சமுதாயத்தொண்டுகளை விவரி.

(iii) "அடித்தளம்" துணைப்பாடத்தின்மூலம் அறிந்த செய்திகளை விளக்கி எழுதுக.